அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :121/2017
தேதி : 24/10/2017

பத்திரிக்கை மற்றும் ஊடக சகோதரர்களுக்கு

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடந்த தீக்குளிப்பு சம்பவம் தமிழகத்தையே உருகவைத்துள்ளது. இந்த சம்பவத்தால் அனைத்து தரப்பினரும் அதிர்ச்சியில் மூழ்கியுள்ளோம்.

அதிர்ச்சி தரும் சம்பவத்தால் என் மனதில் எழுந்த சில எண்ணங்களையும் கேள்விகளையும் பதிவிட்டுள்ளேன். இந்த பதிவினை தங்களது பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் பதிவு செய்யுமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

கந்து வட்டி கொடுமை ஓரிரு நாட்களில் இன்னுமொரு கொடுமையில் காணாமல் போய்விடும். மீண்டும் மீண்டும் உயிர்களின் இழப்பை கண்டும், நமது மெத்தனம் மற்றும் செயலற்றத்தனத்தின் மீதுதான் கோபமும் வருத்தமும் வருகிறது.

சட்டம் கடுமையாக இயற்றப்பட்டும் அதனை முழுமையாக நடைமுறை படுத்த முடியாத அரசாங்கம் மற்றும் அரசின் இயந்திரங்கள்.

இந்த கொடுமைகளை கண்டும் அதன் பாதிப்புகளை முழுமையாக அறிந்தும் இரண்டொரு பத்திரிகை செய்திகள் / அறிக்கைகள் கொடுத்து, அதற்கு தீர்வு காண கடைசி வரை போராடாமல் அரசியல் செய்ய அடுத்த நடவடிக்கைக்கு செல்லும் அரசியல் கட்சிகள்.இதில் இந்தியாவில் எந்த ஒரு அரசியல் கட்சியும் விலக்கு அல்ல.

**Prevention is better than cure.**

ஆனால்

வங்கிகளின் செயல்பாடுகள் அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை புரிந்து அவர்களுடன் இணைந்து செயல்பட்டிருந்தால், அந்த பச்சிளம் குழந்தை உட்பட்ட அந்த மூன்று உயிர்கள் இன்று காப்பாற்ற பட்டிருக்கலாம்.

வங்கிகளை தனது அதிகாரத்தில் வைத்து அவற்றின் சட்ட திட்டங்களை தனது பொருளாதார கொள்கைக்கு ஏற்றபடி வடிவமைக்கும் மத்திய வங்கியும் அதனை இயக்கும் மத்திய அரசும் போர்க்கால அடிப்படையில் உடனடி நடவடிக்கை எடுத்து மக்களை இந்த மீளா துயர அவலங்களின் இருந்து காப்பாற்றி இருக்க கூடும்.

கிராமத்தில் ஒரு லட்ச ரூபாய் மதிப்பில் ஒரு பூக்கடை, காய்கறிக்கடை, சவரக்கடை, செருப்பு கடை வைப்பதற்கு தேவையான நிதி உதவி அல்லது கடன் வழங்க வேண்டுமெனில், பல வித ஆவணங்கள், அவருடைய வங்கி விபரங்கள், கடந்த கால வருமானங்கள், ஜாமீன் கையெழுத்து, சொத்து விபரங்கள் என பலவித சிக்கலான வழிமுறைகள். தனது தினசரி படி அளக்கும் வேலையை விட்டு பல நாட்கள் வங்கி வங்கியாக ஏறி இறங்கி வெறும் கையுடன் வந்த பல லட்ச இந்தியர்கள் இந்த நாட்டில் இருப்பார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

ஒரு லட்சம் முதல் சில லட்சங்கள் வரை முதலீடாக தேவைப்படும் வறுமை கோட்டிற்கு கீழே இருக்கும் மக்களும், தன்னுடைய உழைப்பையும் திறமையும் மட்டுமே நம்பி வேறு எந்த ஒரு சொத்தும் வருமானமும் இல்லாத சிறு குறு வியாபாரிகள், தொழில் முனைவர்கள் தொழில் தொடங்க மேற்கொள்ளும் போராட்டங்கள் பற்றி நாம் அறியாதது ஒன்றுமில்லை.

பெரும் பணம் மதிப்பிழப்பிற்கு பிறகு அனைத்து வங்கிகளிலும் ஏராளமான பணப்புழக்கம் ஏற்படும் என்றும் மேற்குறிப்பிட்டுள்ள வர்க்கத்தினரின் வாழ்க்கை தரம் மேம்படும் என்ற அரசாங்கத்தின் வார்த்தைகள் வெற்று வார்த்தைகளாவே இன்று வரை இருப்பதை காண்கிறோம்.

ஏழைகளை பணக்காரராக மாற்றுவது நடக்கவில்லை, அதே சமயம் நல்ல முறையில் நீண்ட காலம் தொழில் நியாயமான முறையில் செய்தவர்களுக்கு கூட எந்த ஒரு ஊக்கமும் இந்த அரசாங்கமும் வங்கியும் அளிக்கவில்லை. அதற்கு உதாரணம் இன்று மூடப்பட்டிருக்கும் ஒரு மிகப்பெரிய நகைக்கடை. பல இடங்களில் கடைகள் நடத்திவந்த இந்த நிறுவனத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி காரணம் என்ன என்பது புரியவில்லை. ஆனால் நாட்டின் பொருளாதார நிலை மிக அபாயகரமான நிலைக்கு போய் கொண்டிருப்பதை உணர முடிகிறது.

நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் மத்திய அரசின் முக்கிய உறுப்பினர்களே விளக்கத்துடன் எடுத்து உரைக்கும்போது கூட கண்டுகொள்ளாமல் இருப்பது மத்திய அரசிற்கு நல்லதல்ல.

ஆனால் இதற்கு எதிர்மறையாக ஒரு சிலர் மட்டும் தனது சொத்து மதிப்பை விட பல மடங்கு கூடுதலாக பல்லாயிரம் கோடி கடன் வாங்குவதற்கு வங்கி அதிகாரிகள் அவர்களின் தொழில் மீது அக்கறையை வாரி வழங்குகிறார்கள். அது வாரா கடனாக மாறிய பின்னரும் அந்த நபர்கள் மீது காட்டும் அக்கறை, இன்று கந்து வட்டியின் கொடுமையினால் உயிரை போக்கிக்கொண்ட ஏழைகளின் மீது காட்டுவதில்லை.

இந்த என் பதிவு தற்போது உள்ள மத்திய அரசின் மீது மட்டுமல்ல, இதற்கு முன்னர் இருந்த மத்திய அரசின் மீதும் அனைத்து மாநில அரசாங்கங்கள் மீதும் இதற்கு காரணமான என் கட்சி உட்பட்ட அனைத்து அரசியல் கட்சிகள் மீதும் தான்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

ஆனால் தற்போது திணிக்கப்பட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகள் அனைத்து தரப்பினருக்கும் அழுத்தம் கொடுத்துள்ளதால் அது சமூகத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களை உடனடியாக பாதிக்கிறது. அடுத்த கட்டமாக இந்த அழுத்தம் மற்ற வர்க்கத்தினரை மேலும் பாதிக்க ஆரம்பிக்கும் போது நாட்டில் பல குழப்பங்கள் ஏற்பட்டு, பல்வேறு பாதிப்புகள் புரட்சிகளுக்கு வழிகோலும் என்ற எண்ணம் எழுகிறது.

நாடே ஒரு போராட்ட களமாக உருவாகி வரும் இந்த காலக்கட்டத்தில் சரியான ஒரு நிலைப்பாட்டினை மத்திய மாநில அரசாங்கங்கள் எடுத்து, அதனை முழுமையாக நிறைவேற்ற அதிகாரிகளை அதற்கேற்ப தயார் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

நெல்லையில் நிகழ்ந்த கொடுமை மீண்டும் நாட்டின் எந்த இடத்திலும் நடக்க கூடாது. நமது இல்லத்தில் குழந்தையின் விரல் நுனியில் ஒரு சிறு நெருப்பு பட்டாலே காண சகிக்காமல் துடித்து போகும் நாம், எந்த ஒரு பாவமும் அறியாத, அந்த குழந்தையின் உடல் எரிந்ததை நாட்டில் நடக்கும் இன்னொரு நிகழ்வு என்ற முறையில் அமைதியாக இருந்தால் நாம் மனிதநேயத்தை இழந்து விட்டோம் என்று தான் சொல்லவேண்டும்.

**உயிர், உடல், வலி, உறவு என்றதொரு அனுபவம் பற்றி அறியாத 18 மாத குழந்தை நெருப்பு தன்னை விழுங்கும்போது அனுபவித்த வேதனை இந்நாட்டில் வாழும் அனைவரையும் தூங்க விடாமல் அல்லவா செய்ய வேண்டும்.**

**எந்த காரணத்திற்காக தனது உடலில் நெருப்பு வைக்கப்படுகிறது என்பதை உணராத 4 வயது குழந்தை. இந்த உலகத்தில் தனது ஒரே நம்பிக்கையான தந்தையும் தாயும் தான் என்று இதுநாள் வரை வாழ்ந்து வந்த அந்த குழந்தையும் தனது தந்தையே தன்னுடைய உடலுக்கு தீ வைத்ததை ஏன் என்று கடைசி நொடி வரை உணர்ந்திருக்குமா?**

தன் உயிர் போகும் நிலையிலும் தனது குழந்தைகளை காக்கும் குணத்தை உள்ள தாயின்கண் முன்னால் தான் ஈன்றெடுத்த இரண்டு பச்சிளங் குழந்தைகள் உடல்கள் தீயில் துடித்ததை காணும் கொடுமை எந்த தாய்க்காவது நேர அனுமதிக்கலாமா ?

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

தான் மிகவும் நேசித்த தனது குடும்பத்தை தனது கையாளாக தனத்தினால் காப்பாற்றமுடியாமல் போயிற்றே என்ற எண்ணத்தில், இந்த கொடுமையை செய்து இப்போது உயிருக்கு போராடி, ஆனால் மனதால் உணர்வால் இறந்து போன அந்த இசக்கி முத்து ? இவர் வாழும் காலம் வரை இவரின் மன நிலை?

இன்னொரு இசக்கி முத்துவிற்கு இந்த நிலை வராமல் தடுப்பதெப்படி????

ஏற்கனவே சில நூறு இசக்கி முத்துக்களை விழுங்கி இருக்கும் கந்து வட்டி என்ற அரக்கனின் பிடியில் இருந்து சரியான ஒரு பொருளாதார நடவடிக்கை மட்டுமே காப்பாற்ற முடியும். வங்கிகள் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றவேண்டும்.

அடிப்படை பொருளாதார தேவைகளுக்கு நீண்ட கால தீர்வை அரசாங்கங்கள் அளிக்காத நிலையில் குறுகிய கால தீர்வாக கந்து வட்டிக்காரர்களை மக்கள் அணுகும் முறையை மாற்றும் சக்தி அரசாங்கத்திற்கு மட்டுமே உள்ளது, அதனை அனைத்து தலைவர்களும் முன்னின்று போராடி நிறைவேற்ற வேண்டும்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com